**C.C No 389/2009**
**Date 04.11.2022**
**PW : 1**
**பெயர் - திரு. சுப்பிரமணியன் த/பெ.**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவ நடந்த காலகட்டத்தில் எனது தந்தை ஒன்றிய கவுன்சிலர் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பிறகு எனது மனைவி ஒன்றிய கவுன்சிலராக இருந்தார். எனது மனைவி தற்போது நடந்த ஊராட்சி ஒன்றிய கவுன்சிலில் சிறிய ஓட்டு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார் என்றால் சரிதான். நான் காங்கிரஸ் கட்சியில் முக்கிய பிரமுகர் என்றால் சரிதான். 2009 ஆம் ஆண்டு வசந்தகுமார் சட்டமன்ற உறுப்பினராக நான்குநேரி தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் சரிதான்.

வசந்தகுமார் நான்குநேரிக்கு வந்தால் என்னை அழைப்பார் என்றால் சரிதான். எனக்கு அரசியல் மற்றும் காவல்நிலையத்தில் செல்வாக்கு உள்ளது. நான் நான்குநேரி யூனியன் ஆபிஸில் இருந்து உன்னங்குளத்தில் மதிய உணவு சாப்பிட்டுவிட்டு மூலைக்கரைபட்டி நோக்கி சென்று கொண்டிருந்தேன். எதிரிகள் எனக்கு எதிரே வந்தார்கள். எதிரிகள் என்னை உதைத்து தள்ளிய விபரத்தை போலிசார் விசாரணையில் இரண்டு வாகனங்கள் உரசி என்று சொல்லி இருப்பேன்.

எதிரி முருகன் அன்றைய தினம் பாலத்தில் மோதி எதிரி முருகனின் கால் முறிந்தது என்றால் முருகன் கீழே விழுந்தது தெரியும் ஆனால் பாலத்தில் மோதினாரா என்று தெரியாது. எதிரிகளின் மாமாவின் அக்காவிற்கு நான் சொத்து விசயமாக உதவி செய்துள்ளேன் என்றால் அவருக்கு வேறு ஆட்கள் கிடையாது அதனால் உதவி செய்தேன். அதனால் எனக்கும் எதிரிகளுக்கும் மனகசப்பு இருந்தது என்றால் சரிதான். எதிரிகளின் மாமாவிற்கு நான் எதிராக செயல்படுவதால் எதிரிகளை நான் தான் முந்திபோய் இடித்ததால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகாரை அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை கெட்ட வார்த்தை பேசவில்லை கொலைமிரட்டல்விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**